# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097122

1. District மாவட்டம் : Kanchipuram
PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption
Year: ஆண்டு
FIR No.: மு.த.அ. எண் 3/2018
Date: நாள் 17.04.2018

2. (i) Act சட்டம்: Cr. PC — Sections பிரிவுகள்: 102
(ii) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 — Sections பிரிவுகள்: U/S 13(2) r/w 13(1)(d) and 13(1)(a) of PC Act 12 r/w 7 of PC Act
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 13.04.2018 — Date to : நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 11.45 hrs — Time to : நேரம் வரை 20.00 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.04.2018 — Time நேரம் : 16.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 17.04.2018 — Time நேரம் : 16.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Typed complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — North east about 35 kms
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி — Regional Transport office, Sriperumbudur Kanchipuram DT.
(c) In case outside limit of this Police Station, then the Name of P S — District
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — Tr. G. Subramani
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality நாட்டினம் — Indian.
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் — PA(LA) to collector Kanchipuram Inspection cell officer (Full Addl charge) Kanchipuram & Thiruvallur Dt,
(g) Address : முகவரி — collectorate campus, Kanchipuram.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

separate sheet Attached

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

delayed by the Complaint

GCP 240-34(Type 2) 90 000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

unaccount money seized from RTO Office, Sriperumbudur
Rs 1,87,920/-

10. Total value of properties stolen / involved : NIL
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் NIL

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

நான் இன்று 17.04.2018ம் தேதி மாலை சுமார் 16.00 மணியளவில்
நிலைய அலுவலில் இருந்த போது திரு. கே. சம்பந்தம், காஞ்சிபுரம் மாவட்ட
ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நில எடுப்பு) மற்றும் காஞ்சிபுரம் &
திருவள்ளூர் மாவட்ட இலஞ்ச ஒழிப்பு அலுவலர் (கூடுதல் பொறுப்பு)
காஞ்சிபுரம் (இடைப்பு) அவர்கள் காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்பு துறை அலுவலகத்திற்கு வந்து காவல் துறை கண்காணிப்பாளர்,
அவர்களிடம் கடந்த 13.04.2018 அன்று ஸ்ரீபெரும்புதூர்
வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மேற்கொண்ட
சோதனையில் வராத பணம் ரூ. 1,87,920/- கைப்பற்றப்பட்டது, அலுவலர்கள்,
மற்றும் தரகர்களிடம் இருந்து வாக்குமூலம் பெற்றது சம்பந்தமாக
அவரது அலுவலக ந.க.எண் 126/2018/இ2 நாள்: 16.4.2018 நாளிட்ட
கடிதம் மூலம் சோதனை அறிக்கை, பணம், வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்கள்
இணைத்து தக்க நடவடிக்கைக்காக அனுப்பினார். மேற்படி கடிதத்தின் மீது
காவல் துறை கண்காணிப்பாளர் அவர்கள் வழக்கு பதிவு செய்யுமாறு அறிவுறுத்தினார்.
கடிதத்தின் மற்றும் வெள்ளையாள் காகிதம் இணைக்கப்பட்டுள்ளது

— தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] [signature] 17/4/2018

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 18.04.2018
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் at 10.30 hrs.

Name: பெயர் V. GANESAN
Rank: நிலை ....................No. எண் ..........
Inspector of Police,
Vigilance and anti Corruption
Kanchipuram.

Received copy,
[signature]
17/4/18



17/4/18 FA [illegible] (FAC) 4 pm

**Kanchipuram V&AC, Cr.No.3/2018-FIR Column-7 accused particulars Attached herewith.**

1) Tr.G.Venketeswaran, Age 49, S/o.Ganesan, RTO, O/o RTO Sriperumbudur, Kanchipuram District

2) Tr.Kannan, Motor Vehicle Inspector, RTO office, Sriperumbudur, Kancheepuram Dist.

3) Tmt.A.K.Jayalakshmi, Age 56, W/o.Rajkumar (late), P.A. to RTO, RTO office, Sriperumbudur, Kancheepuram Dist.

4) Tr.L.Tamizhselvan, Age 52, S/o.Loganathan, Supdt., RTO office, Sriperumbudur, Kancheepuram Dist.

5) Tr.R.Mohan, Age 35, S/o.Ragavan, Accountant, RTO office, Sriperumbudur, Kancheepuram Dist.

6) Tr.Anbu, Age 37, S/o.Natesan, Assistant, A1 Section, RTO office, Sriperumbudur, Kancheepuram Dist.

7) Tr.A.Ansari, Age 35, S/o.Abdullah, Junior Assistant, RTO office, Sriperumbudur, Kancheepuram Dist

Private Individuals

8) Tr.V.Senthilkumar, Age 39, S/o.Venugopal, Thirumazhisai, Chennai.

9) Tr.V.Anandan, Age 36, S/o.Kumar, Beemanthangal, Sriperumbudur, Kanchipuram District.

10) Tr.D.Saranraj, Age 36, S/o.Dhanasekar, Bava Street, Kanchipuram.

**Kanchipuram V&AC, Cr.No.3/2018-FIR contents continues for Column-12:**

அனுப்புநர் திரு.கோ.சுப்பிரமணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நி.எ) & மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (மு.கூ.பொ), காஞ்சிபுரம் & திருவள்ளூர் மாவட்டங்கள் (இ) காஞ்சிபுரம் பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு & கண்காணிப்பு பிரிவு, இராகவேந்திரா நகர், காஞ்சிபுரம். ந.கா. 126/2018, நாள்: 16.04.2018 அய்யா, பொருள்: கூட்டுத் தணிக்கை - இரு துறை கூட்டுத் தணிக்கை - காஞ்சிபுரம் மாவட்டம் - திருபெரும்புதூர் வட்டார போக்குவரத்து அலுவலகம் - 13.04.2018 அன்று காலை 11.45 மணிக்கு திடீராய்வு மேற்கொள்ளப்பட்டது - கணக்கில் வராத தொகை ரூ.1,87,920/- கைப்பற்றப்பட்டது - தொடர் நடவடிக்கை மேற்கொள்வது - தொடர்பான கடிதத்தின் விவரம் வருமாறு திருபெரும்புதூர் பட்டு நூல் சத்திரம் குன்றத்தூர் சாலையில் அமைந்துள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகனம் சம்மந்தமான வேலைகளை முடிக்க வரும்போது மக்களிடமிருந்து அரசு நிர்ணயித்த கட்டணத்தை விட கூடுதல் பணம் லஞ்சமாக வசூலிப்பதாக காவல் துறையினருக்கு கிடைத்த ரகசிய தகவலை தொடர்ந்து இன்று 13.04.2018-ந் தேதி காலை 11.45 மணியளவில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நில எடுப்பு) மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையில், திருப்பெரும்புதூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் கூட்டாய்வினை மேற்கொண்ட போது திருப்பெரும்புதூர் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.ஜி.வெங்கடேஷ்வரன், திருமதி.ஏ.கே.ஜெயலட்சுமி, ஆர்.டி.ஓ-வின் நேர்முக உதவியாளர் திரு.எல்.தமிழ்ச்செல்வன், கண்காணிப்பாளர் மற்றும் அலுவலக பணியாளர்கள் ஆகியோர்கள் பணியில் இருந்தனர். அவர்கள் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டு அலுவலக ஆவணங்கள் மற்றும் அன்றைய வரவு செலவு கணக்கு சரிபார்த்த போது கணக்கில் வராத பணம் ரூ.1,87,920/- அதிகப்படியாக இருந்தது கண்டறியப்பட்டது. அதற்கான முறையான ஆவணங்களோ, முகாந்திரமோ ஏதும் கூறாததால் அப்பணத்தை மேற்குறிப்பிட்ட அலுவலர்கள் லஞ்சமாக பெறுவதற்கென உள்ள பணம் எனக் கருதி கைப்பற்றப்பட்டது. மொத்த தொகை ரூ.1,87,920/- அப்பணத்தையும் ஆஜரில் இருந்தவர்களிடம் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்களை செயல்முறையுடன் சேர்த்து தங்களிடம் மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அனுப்பப்படுகிறது. இது சம்மந்தமாக தங்கள் துறை மேற்கொள்ளப்படும் நடவடிக்கை முடிவினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்கள் நம்பிக்கையுள்ள ஒப்பம் XXX மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நி.எ), மாவட்ட

**Kanchipuram V&AC, Cr.No.3/2018-FIR contents continues for Column-12:**

ஆய்வுக் குழு அலுவலர் (மு.கூ.பொ), காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள், (இ) காஞ்சிபுரம். இணைப்பு - 1) கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,87,920/-, 2) திடீராய்வின் செயல்முறைகள், 3) ஆய்வின் போது அலுவலர்கள் மற்றும் பணியாளர்களிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்கள், 4) கைப்பற்றப்பட்ட பதிவேடுகளின் நகல்கள், 5) திரு.செந்தில்குமார், த/பெ.வேணுகோபால் என்பவரின் வாக்குமூலம், 6) திரு.சரன்ராஜ், த/பெ.தனசேகர் என்பவரின் வாக்குமூலம், 7) திரு.ஆனந்தன், த/பெ.குமரன் என்பவரின் வாக்குமூலம், 8) 13.04.2018 அன்று வாகன வரி வசூலிக்கப்பட்ட பட்டியல் அரசு கணக்கில் செலுத்தப்பட்ட விவரங்கள், 9) வட்டார போக்குவரத்து அலுவலவரின் வாக்குமூலம். மேலும் திடீராய்வின் செயல்முறை விவரம் வருமாறு

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நில எடுப்பு) மற்றும் காஞ்சிபுரம் ¢ திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (முழு கூடுதல் பொறுப்பு), காஞ்சிபுரம் (இருப்பு) மற்றும் காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர்களின் தலைமையில் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் பட்டு நூல் சத்திரம், குன்றத்தூர் சாலையில் அமைந்துள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்தில், வாகனம் சம்மந்தமான வேலைகளை முடிக்க வரும் பொது மக்களிடமிருந்து, அரசு நிர்ணயித்த கட்டணத்தை விட கூடுதல் பணம் லஞ்சமாக வசூலிப்பதாக கிடைத்த ரகசிய தகவலை தொடர்ந்து, இன்று 13.04.2018-ந்தேதி காலை 11.45 மணியளவில், மேற்குறிப்பிட்ட வட்டார போக்குவரத்து அலுவலகம், திருப்பெரும்புதூரில் மேற்கொள்ளப்பட்ட திடீர் கூட்டுத் தணிக்கையின் நடவடிக்கைகள்.

| | |
|---|---|
| துறைத் தலைமை அலுவலர். | போக்குவரத்து ஆணையர், சேப்பாக்கம், எழிலகம், சென்னை-05, |
| வட்டார போக்குவரத்து அலுவலகம் திருப்பெரும்புதூரில் ஆய்வின்போது கலந்து கொண்டவர்கள். | 1. திரு.கோ.சுப்பிரமணி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நில எடுப்பு) ¢ மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (முழு கூடுதல் பொறுப்பு) காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் (இருப்பு), காஞ்சிபுரம். |

**Kanchipuram V&AC, Cr.No.3/2018-FIR contents continues for Column-12:**

2. திரு.T.சிவபாதசேகரன்
   காவல் துணை கண்காணிப்பாளர்,
   ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு.
   காஞ்சிபுரம்.

3. திருமதி G.S.தமிழரசி
   காவல் ஆய்வாளர்,
   ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு. காஞ்சிபுரம்.

4. திருமதி D.சிவகாமி
   காவல் ஆய்வாளர்.
   ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு. காஞ்சிபுரம்.

5. திரு.G.வெங்கடேஷ்வரன். வ-49, த/பெ. R.கணேசன்.
   வட்டார போக்குவரத்து அலுவலர்,
   வட்டார போக்குவரத்து அலுவலகம்.
   திருப்பெரும்புதூர். காஞ்சிபுரம் மாவட்டம்

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர். பட்டு நூல் சத்திரம், குன்றத்தூர் சாலையில் அமைந்துள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்தில். இன்று 13.04.2018-ந்தேதி முற்பகல் 11.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. இக்கூட்டமைப்பானது. திரு.கோ.சுப்பிரமணி. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நில எடுப்பு) மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (முழு கூடுதல் பொறுப்பு) காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள். (இருப்பு) காஞ்சிபுரம் அவர்களின் தலைமையில். காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் அவர்களது பார்ட்டியுடன் இணைந்து திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் கூட்டாய்வு மேற்கொண்டபோது. திரு.G.வெங்கடேஉஷ்வரன். வயது-49 த/பெ. கணேசன், வட்டார போக்குவரத்து அலுவலர். வட்டார போக்குவரத்து அலுவலகம். திருப்பெரும்புதூர். காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களும். திருமதி..A.K.ஜெயலட்சுமி வயது-56, க/பெ. ராஜ்குமார் (லேட்), ஆர்.டி.ஓ.வின் நேர் முக உதவியாளர். திரு.L.தமிழ்செல்வன். வயது (52) த/பெ.லோகநாதன். கண்காணிப்பாளர். திரு.A.அன்சாரி வயது (35). த/பெ. அப்துல்லா, இளநிலை உதவியாளர். B-2-பிரிவு. திரு.R.மோகன். வயது (35). த/பெ. ராகவன். கணக்கர். B-1-பிரிவு. திரு.N.அன்பு வயது (37) த/பெ. நடேசன். உதவியாளர். A-1-பிரிவு. திரு.N.சண்முகசுந்தரம், வயது (32). த/பெ. நடராஜன். புகைப்படாளர் (Elcot). திரு.மு.பாலமுருகன் வயது (37) த/பெ. குழந்தைசாமி. கணினி நிரலர் ஆகியோர்கள் வட்டார போக்குவரத்து அலுவலகம். திருப்பெரும்புதூர். காஞ்சிபுரம் மாவட்டத்தில் பணியிலிருந்தனர். மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரான நான். மேற்படி அலுவலர்களுக்கு என்னையும் மற்றும் ஆய்வுக் குழுவினரையும் அறிமுகம் செய்துவைத்து. பின் ஆய்வுக் குழுவில் உள்ள அனைவரும் தங்களது உடமைகளை வட்டார

**Kanchipuram V&AC, Cr.No.3/2018-FIR contents continues for Column-12:**

போக்குவரத்து அலுவலர் திரு.G.வெங்கடேஷ்வரன் மற்றும் அவரது அலுவலகத்தில் இருந்த அலுவலர்களிடம் சுயசோதனை செய்துகாட்டி, அலுவலக சோதனையை ஆரம்பித்து, அலுவலகம் முழுவதும் சோதனை செய்தோம். அது சமயம், வட்டார போக்குவரத்து அலுவலர் திரு. G.வெங்கடேஷ்வரன் அவர்கள் வாசலுக்கு நேராகயிருந்த தனி அறையில் கிழக்கு நோக்கியிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவரது அறைக்கு பின்னால், இருந்த கேபினில், இடது புறம் இளநிலை உதவியாளர் திரு.அன்சாரி அவர்களது இருக்கையும், எதிரில் கண்காணிப்பாளர் திரு.தமிழ்ச்செல்வன் அவர்களும், அவருக்கு வலது புறத்தில் திரு.அன்பு, உதவியாளர் அவர்களும், கேபினுக்கு வலது புறம் கண்காணிப்பாளர் இருக்கையும் உள்ளது. வலது புறம் உள்ள இருக்கை தவிர மற்ற அனைவரும் அவர்களது இருக்கையில் பணி செய்துக்கொண்டு இருந்தனர். இந்த கேபினுக்கு அடுத்த கேபினில் திருமதி..A.K.ஜெயலட்சுமி, ஆர்.டி.ஓ அவர்களின் நேர்முக உதவியாளர் அவர்கள், கிழக்கு நோக்கியவாறு அவரது இருக்கையில் அமர்ந்திருந்தார். அவர் கேபினுக்கு எதிரே கணினி அறையில் திரு.பாலமுருகன் அவர்கள் பணியிலிருந்தார். நேர்முக உதவியாளர் அவர்களின் கேபினுக்கு ஒட்டியவாறு இடதுபுறம், பாத்ரூம், டாய்லட் இருந்தது. மேலும், இவ்வலுவலக முதல் மாடியில், வலது பக்க அறையானது, மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கண்ணன் அவர்களின் அறை உள்ளது. அதில் அவர் இல்லை. அவர் இருக்கைக்கு வலது பக்கத்தில் வெளிநபர் மாதம் ரூ.5,000/- சம்பளத்தில் திரு.அரவிந்த் வயது-22 த/பெ. அம்பேத் என்பவர் எப்.சி சம்மந்தமான பணிகளை கணினியில் ஏற்றுவது போன்ற பணிகளை கவனிக்க ஆர்.டி.ஓ அவர்களால் நியமிக்கபட்டு கடந்த 5 மாதங்களாக செய்வதாக கூறினார். இடது புறம் அமைந்துள்ள அறையின் உள்ளே நேராக உள்ள கேபினில் எல்காட் பணியாளர் திரு.N.சண்முகசுந்தரம் அவர்கள் அவரது பணியை செய்துக்கொண்டிருந்தார். பதிவுரு எழுத்தர் அறை உள்ளது. பதிவுரு எழுத்தர் இல்லை. அவர் அறைக்கு வலது பக்கத்தில் பதிவறை உள்ளது. அந்த பணியிடம் காலியாக உள்ளது எனவும், அதற்கு கூடுதல் பொறுப்பாக திரு.அன்சாரி, இளநிலை உதவியாளர் அவர்களை நியமித்துள்ளதாகவும் வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்கள் தெரிவித்தார். மேலும், அந்த இரண்டு அறைகளுக்கு இடையே ஒரு உதவியாளரின் இருக்கை கணினியுடன் காணப்பட்டது. விசாரிக்க அந்த பணி காலியாக உள்ளதாக தெரிவித்தார். மேலும், அதனை அடுத்த அறையில் யாரும் இல்லாமலும், அதற்கு எதிர் அறையில் ஸ்டோர் ரூம் ஒன்றும் இருந்தது. மேலும், இரண்டாவது மாடியில் உள்ள வலது மற்றும் இடது பக்க அறைகள் பூட்டப்பட்டு இருந்தது. அதற்கு மேல் உள்ள மொட்டை மாடியில் தண்ணீர் டேங்க் மட்டும் இருந்தது. மேலும், அலுவலகத்திற்குள் இருந்தவர்களை விசாரிக்க வெளிநபர்களான.

## Kanchipuram V&AC, Cr.No.3/2018-FIR contents continues for Column-12:

| வ.எண். | வெளிநபர்களின் பெயர்கள் | இருப்பின் மதிப்பு |
|---|---|---|
| 1. | திரு.முரளி வ-34, த/பெ.ராமலிங்கம். சோகண்டி கிராமம் (ஸ்டார் ஓட்டுநர் பள்ளி) | ரூ.6,810/- |
| 2. | திரு.எஸ்.இராஜேந்திரன், வ-65 த/பெ. சாரங்கபாணி. விருகம்பாக்கம். சென்னை. (ஸ்ரீ அண்ணா ஓட்டுநர் பள்ளி) | ரூ.900/- |
| 3. | திரு.சுரேஷ். கூ-23 த/பெ. சிவலிங்கம். மகாத்மா காந்தி தெரு, ஸ்ரீபெரும்புதூர் (எம்.கே.எஸ். ஓட்டுநர் பள்ளி) | ரூ.1,560/- |
| 4. | திரு.ஆர்.வெங்கடேசன், கூ-32 த/பெ. ராதாகிருஷ்ணன். பாடியநல்லூர் காஞ்சிபுரம். (சங்கீதா ஓட்டுநர் பள்ளி) | ரூ.1,350/- |
| 5. | திரு.த.சரண்ராஜ், வ-29. த/பெ. தனசேகரன். பாவா தெரு. காஞ்சிபுரம் | ரூ.25,000/- & ரூ.2,260/- |
| 6. | திரு.ஆனந்தன். வ-36. த/பெ. குமார். பீமன்தாங்கல். பெரும்புதூர். (பாலாஜி ஓட்டுநர் பள்ளி) | ரூ.39,000/- |
| 7. | திரு.கௌதம். வ-24. த/பெ. வெங்கடேசன். மகாத்மா காந்தி நகர். ஸ்ரீபெரும்புதூர் | ரூ.330/- |
| 8. | திரு.வே.செந்தில் குமார். வ-39. த/பெ. வேணுகோபால். திருமழிசை, சென்னை. | ரூ.1,22,000/- |
| 9. | திரு.அண்ணாதுரை, வ-44. த/பெ. செல்வமதி. மைலாப்பூர். சென்னை. | ரூ.1,070/- |

ஆகியோர்கள் சந்தேகத்திற்கிடமான நிலையில் அலுவலகத்தின் உட்புறம் இருந்தனர். மேற்குறிப்பிட்ட வெளிநபர்களை விசாரிக்க (1) திரு.முரளி என்பவர் ஸ்டார் ஓட்டுநர் பள்ளியில் பணிபுரிவதாகவும். திரு.யுவராஜ் என்பவரின் லைசென்ஸில் உள்ள பிழையினை திருத்த வந்துள்ளதாகவும். அவர் வைத்திருந்த பணம் அதற்கான தொகையை செலுத்தவும். சொந்த செலவிற்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். (2) திரு.எஸ்.இராஜேந்திரன் என்பவரை விசாரிக்க அவர் ஸ்ரீ அண்ணா ஓட்டுநர் பள்ளியில் பணிபுரிவதாகவும் TN 70A 1284 என்ற லாரிக்கு வரி செலுத்த வந்ததாகவும் அதனால் ரூ.800/- கொண்டு வந்ததாகவும் கூறினார். (3) திரு.சுரேஷ் அவர்கள் எம்.கே.எஸ். ஓட்டுநர் பள்ளியில் பணிபுரிவதாகவும் ஆர்.டி.ஓ. சம்மந்தமான பணிகளை கவனிப்பதாகவும் 4 பேர்களுக்கான டிரைவிங் லைசென்ஸ் அப்ளை செய்ய வந்ததாகவும் அதற்கான ரூ.1,560/-ஐ கொண்டு வந்ததாகவும் கூறினார். (4) திரு.ஆர்.வெங்கடேசன் என்பவர் சங்கீதா டிரைவிங் ஸ்கூலில்

**Kanchipuram V&AC, Cr.No.3/2018-FIR contents continues for Column-12:**

பணிபுரிவதாகவும் மணி என்பவரின் லைசென்ஸ் ரெனிவல் செய்ய வந்ததாகவும் அதற்காகவும், அவரது சொந்த செலவிற்காகவும் ரூ.1,350/- கொண்டுவந்ததாகவும் கூறினார். (5) திரு.த.சரண்ராஜ் என்பவர் அவரது தந்தை திரு.தனசேகரன் என்பவர் காஞ்சிபுரத்தில் "ஆட்டோ கன்சல்டேசன்" நடத்துவதாகவும் டூரிஸ்ட் வாகனத்திற்கு வரி செலுத்த ரூ.25,000/- கொண்ட பணம் தனியாக ரப்பர்பேண்ட் போடப்பட்டும். தனியாக அவரது பர்ஸில் ரூ.2,260/- ம் இருந்தது. (6) திரு.ஆனந்தன் என்பவர் பாலாஜி டிரைவிங் பள்ளியில் வேலை செய்வதாகவும், கண் பார்வை குறைவு என்பதால் ஆர்.டி.ஓ சம்மந்தப்பட்ட பணிகளை கவனிப்பதாகவும் கூறினார். மேலும் அவர் ரூ.39,000/- பணம் வைத்திருப்பதாகவும் அந்தப்பணம் 4 பேர்களுக்கான எப்.சி செய்ய ஆகும் கட்டணம் மற்றும் சொந்தப்பணம் என்று கூறினார். ஆனால் விசாரணையில் எப்.சிக்காக ரூ.2,700/- கட்டப்பட்டு ரசீதும் பெற்றுள்ளார். மீதி பணத்திற்கு சரியான முகாந்திரம் கூறவில்லை. (7) திரு.கௌதம் அவர்கள் அவரது புதிய இருசக்கர வாகனத்திற்கு பதிவு செய்ய ஆகும் தொகை குறித்து கேட்க வந்ததாக தெரிவித்தார். அவரிடம் ரூ.300/- பணம் இருந்தது. அப்பணம் அவருடைய கைசெலவிற்கு கொண்டு வந்தாக தெரிவித்தார். (8) திரு.வே.செந்தில் குமார் என்பவர் திருமழிசையை சேர்ந்தவர் என்றும் அவர் அண்ணாநகரில் உள்ள P.R.R Travels-ல் ஆர்.டி.ஓ அலுவலக வேலைகளை கவனித்துக் கொள்ள ரூ.12,000/- சம்பளம் பெறுவதாகவும், இன்று 6 வாகனங்களுக்கு வரி செலுத்தவும். சொந்த செலவிற்காகவும் ரூ.1,22,000/- பணம் கொண்டு வந்ததாகவும். தினமும் இவ்வலுவலகத்திற்கு வருவது வழக்கம் என்றும் தெரிவித்தார். ஆனால் அவரிடம் அதற்கான ஆவணங்கள் எதுவும் வைத்திருக்கவில்லை. மேலும், (9) திரு.அண்ணாதுரை என்பவர் அவருடைய வாகனம் விபத்திற்குள்ளானதை வெளியில் எடுக்க நீதிமன்ற ஆணை பெற்று வந்துள்ளதாகவும். அதனை ரிலீஸ் செய்ய சான்று கேட்டதாகவும் கூறினார். அவரிடம் ரூ.1,070/- வைத்துள்ளதாகவும் கூறினார். ஆவணங்களையும் காண்பித்தார். மேற்குறிப்பிட்ட 9 நபர்களில் 6 பேர்கள் கூறிய விளக்கமும் அவர்கள் காட்டிய ஆவணங்களும் சரியாக இருந்ததால், அவற்றை விசாரித்தும். சரிபார்த்தும் அவர்களுடைய ஆவணங்கள் மற்றும் பணத்தை அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. மற்ற வரிசை எண்.5, 6 ம் 8-ல் குறிப்பிட்டுள்ள மூவர்களிடம் விசாரித்ததில், திரு.செந்தில் குமார் வைத்திருந்த ரூ.1,22,000/-ற்கு எந்த வித ஆவணங்களும் இல்லை. அவர் கூறும் விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இல்லை. மேலும், அவர் தினமும் இவ்வலுவலகத்திற்கு வருபவர் என அவரே வாக்குமூலம் கொடுப்பதால் அவர் வட்டார போக்குவரத்து அலுவலத்தில் சட்டத்திற்கு புறம்பான பணியை செய்ய லஞ்சமாகவே மேற்குறிப்பிட்ட தொகையை கொடுக்க வந்துள்ளதாக கருதி. அப்பணத்தை கைப்பற்றப்பட்டது. மேலும், திரு.சரண்ராஜ் அவர்களை விசாரிக்க அவர் தனியாக வைத்திருந்த ரூ.25,000/-ஐ ரப்பர்பேண்ட் போட்டு அவரது பாக்கெட்டில் வைத்திருந்ததற்கான விளக்கம் எதுவும் ஏற்றுக்கொள்ளாததாகவும். அவர் கூறும் விளக்கத்திற்கான ஆவணங்கள் எதுவும் இல்லாததாலும். அப்பணமும் வட்டார

**Kanchipuram V&AC, Cr.No.3/2018-FIR contents continues for Column-12:**

போக்குவரத்து அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்கவே கொண்டு வந்துள்ளதாக கருதி அப்பணத்தை கைப்பற்றப்பட்டது. அவரது பாக்கெட் பர்சில் ரூ.2,260/- வைத்திருந்தது தனது செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். அதனை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும், திரு.ஆனந்தன் அவர்களை விசாரிக்க அவர் பாலாஜி டிரைவிங் ஸ்கூலில் பணிபுரிவதாகவும், ஆர்.டி.ஓ சம்மந்தமான பணிகளை கவனிப்பதாகவும், கண்பார்வை குறைவு என்பதால் இப்பணி செய்வதாகவும் கூறினார். அவரிடம் உள்ள பணம் ரூ.39,000/-ஐ பற்றி விசாரிக்க 4 வாகனங்களுக்கு எப்.சி செய்யவும், தனது கண்பார்வை சம்மந்தமாக ஆயுர்வேத மருத்துவம் செய்ய மருத்துவமனைக்கு சென்று வருவதாகவும் தெரிவித்தார். ஆனால், அவர் கூறிய நான்கு வாகனங்களுக்கு கட்டணம் ரூ2,700/- செலுத்தி ரசீதும் பெற்றிருந்தார். மேலும் மருத்துவமனைக்கு சென்றதற்கான எந்த ஆவணங்களோ சான்றோ இல்லை. அப்பணம் வங்கி மூலம் ஏதேனும் பெறப்பட்டதா அல்லது தனிநபர் எவரிடமிருந்து கடனாக பெறப்பட்டதா என்றும் கேட்க, இல்லை என்றும் கூறினார். எனவே, அவர் வைத்திருந்த பணம் ரூ.39,000/-ஐ வட்டார போக்குவரத்து அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்க கொண்டு வந்துள்ளார் என முடிவு செய்து அப்பணத்தையும் நான் கைப்பற்றப்பட்டது. இதை தவிர அலுவலகத்தை சோதனை செய்ததில், தரைதளத்தில் உள்ள பாத்ரூம் அருகேயுள்ள வாஷ்பேசனிற்கு கீழே ரூ.1,500/- பணம் கிடந்தது. அப்பணம் குறித்து அலுவலகத்தில் விசாரிக்க அனைவரும் தங்களுடையது இல்லை என்று தெரிவித்ததால், அப்பணமும் லஞ்சப்பணமாக இருக்கக்கூடும் என கருதி செய்து கைப்பற்றப்பட்டது. ஆக மொத்தம் கைப்பற்றப்பட்ட பணத்தில் ரூ.1,22,000/-ல் (2000 ரூபாய் நோட்டு X 54, 500 ரூபாய் நோட்டு x 25, 200 ரூபாய் நோட்டு x 7, 100 ரூபாய் நோட்டு x 1), ரூ.25,000/-ம் (2000 ரூபாய் நோட்டு x 7, 500 ரூபாய் நோட்டு x 22), ரூ.39,000/-ம் (2000 ரூபாய் நோட்டு x 15, 500 ரூபாய் நோட்டு x 18), மற்றும் பாத்ரூம் அருகே கிடைத்த ரூ.1,500/-ம் (500 ரூபாய் நோட்டு x 3) ஆக மொத்தம் ரூ.1,87,500/- பணத்தை கைப்பற்றப்பட்டது.

<u>வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களிடம் இருந்த தொகைகளின் விவரம்.</u>

| வ.எண். | வெளிநபர்களின் பெயர்கள் | இருப்பின் மதிப்பு |
|---|---|---|
| 1. | திரு.G.வெங்கடேஷ்வரன், வட்டார போக்குவரத்து அலுவலர் | ரூ.50/- |
| 2. | திருமதி..A.K.ஜெயலட்சுமி, ஆர்.டி.ஓ.வின் நேர்முக உதவியாளர் | ரூ.200/- |
| 3. | திரு.L.தமிழ்செல்வன், கண்காணிப்பாளர் | ரூ.450/- |
| 4. | திரு.A.அன்சாரி, இளநிலை உதவியாளர் | ரூ.380/- |

**Kanchipuram V&AC, Cr.No.3/2018-FIR contents continues for Column-12:**

| | | |
|---|---|---|
| 5. | திரு.R.மோகன், கணக்கர், B-1-பிரிவு | ரூ.530/- |
| 6. | திரு.N.அன்பு, உதவியாளர், A-1-பிரிவு | ரூ.130/- |
| 7. | திரு.N.சண்முகசுந்தரம், புகைப்படாளர் (Elcot) | ரூ.280/- |
| 8. | திரு.மு.பாலமுருகன், கணனி நிரலர் | ரூ.1,900/- |

மேற்குறிப்பிட்ட அலுவலர்களின் தொகைகளை சரிபார்த்து அலுவலக "பணியாளர் பணம் கையிருப்பு பதிவேடு" மூலம் 13.04.2018-ன்படி திரு.பாலமுருகன் அவர்கள் தவிர மற்றவர்களின் பணம் சரிபார்க்க சரியாக இருந்ததால், அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.பாலமுருகன் அவர்கள் ரூ.300/- மட்டுமே, பணம் கையிருப்பு பதிவேட்டில் பதியப்பட்டும் மீதி ரூ.1,600/- அதிகமாக வைத்திருந்ததாகவும், அப்பணம் சேலம் சொந்த ஊருக்கு செல்லவேண்டிய செலவிற்காக வைத்திருப்பதாகவும் தெரிவித்ததால், அப்பணத்தை திருப்பி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், அலுவலகத்தில் இன்றைய அரசு வசூல் பணம் காலையில் 10.00 மணிக்கு ஆரம்பித்து 12.38 மணிக்கு முடித்ததில், Off-Line Fees Rs.1,17,370/- (P-4477208 – P-4477269) இருக்க வேண்டியதில் ரூ.1,17,780/- என இருந்தது. அதில் இருந்த அதிகப்படியான பணம் ரூ.410/- உள்ளது. மேலும், On-Line Fees Rs.41,590/- என இருக்கவேண்டியதில் ரூ.41,600/- என ரூ.10/- அதிகப்படியாக இருந்தது. எனவே, அரசுப்பணத்துடன் ரூ.420/- (200 ரூபாய் நோட்டுகள் x 2, 10 ரூபாய் நோட்டுக்கள் x 2) அதிகப்படியான பணத்தை கைப்பற்றிப்பட்டது. அலுவலகத்தில், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, திரு.P.கண்ணன் அவர்களும், அலுவலக உதவியாளர் திரு.நா.வெற்றிமோகன் ஆகியோர்கள் காலை அலுவலகத்திற்கு வந்து, வெளி அலுவலாக சென்றுள்ளதாக வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்கள் கூறினார். பின்னர் சுமார் 14.45 மணியளவில் திரு.கண்ணன், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 அவர்கள் அலுவலகத்திற்கு வந்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.200/- இருந்தது. பணயிருப்பு பதிவேட்டில் சரிபார்க்க ரூ.500/- என பதியப்பட்டிருந்ததில், மதிய உணவு சாப்பிட்டது போக மீதி வைத்திருப்பதாக கூறினார். மேலும், பின் வந்த அலுவலக உதவியாளர் திரு.வெற்றிமோகன் அவர்களை சோதனை செய்ததில் ரூ.245/- வைத்திருந்தார். பணயிருப்பு பதிவேட்டில் சரிபார்க்க ரூ.500/- என இருந்தது. மீதிப்பணம் மதிய உணவு மற்றும் செலவு செய்ததாகவும் தெரிவித்தார். மேலும், அலுவலக பணியாளர்களை விசாரித்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்யப்பட்டது. இந்த திடீர் சூட்டாய்வில் சரியான முகாந்திரம் கூற முடியாத பணம் அதாவது அவைகள் லஞ்சப்பணம் என முடிவு செய்து மொத்தம் ரூ.1,87,920/-ஐ கைப்பற்றப்பட்டது. மேலும், அரசால் ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்ட லஞ்ச ஒழிப்பு சம்மந்தமான விழிப்புணர்வு பலகை பொதுமக்கள் பார்வைக்கு தெரியும்படி அறிவுறுத்தப்பட்டது. தேவையான

**Kanchipuram V&AC, Cr.No.3/2018-FIR contents continues for Column-12:**

ஆவணங்களின் நகல்களான, (1) ஏப்ரல்-2018 வருகைப்பதிவேடு, (2) Off-Line Accounts Statement, (3) On-Line Transaction Summory, (4) பணியாளர் பண கையிருப்பு பதிவேடு (13.04.2018), (5) (i)வேலு என்பவரின் வாகன புதுப்பித்தல் தகுதிக்கான ரசீது எண்.4477217 (TN 18H 1085), (ii)இளவரசி என்பவரின் வாகன புதுப்பித்தல் தகுதிக்கான ரசீது எண்.4477216 (TN 21BZ 5620), (iii)திருநாவுக்கரசு என்பவரின் வாகன புதுப்பித்தல் தகுதிக்கான ரசீது எண்.4477266 (TN 09BZ 7798), (iv)தேவராஜ் என்பவரின் வாகன புதுப்பித்தல் தகுதிக்கான ரசீது எண்.4477212 (TN 20CF 6423) ஆகிய நான்கு ஆவணங்கள் திரு.ஆனந்தன் என்பவரிடமிருந்து மேல்விசாரணைக்காக எடுத்து அதில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (முழு கூடுதல் பொறுப்பு), காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் திரு.G.வெங்கடேஷ்வரன், வட்டார போக்குவரத்து அலுவலர் ஆகியோர்கள் கையொப்பமிட்டு பெறப்பட்டது. அனைத்து நடவடிக்கைகளும், இன்று 13.04.2018-ந்தேதி காலை 11.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 20.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

ஒப்பம் xxx
திரு.கோ.சுப்பிரமணி,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (நில எடுப்பு) மற்றும்
மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்
(பொறுப்பு) காஞ்சிபுரம் மற்றும்
திருவள்ளூர் மாவட்டங்கள்,
(இருப்பு) காஞ்சிபுரம்.

ஒப்பம் xxx
திரு.T.சிவபாதசேகரன்,
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு & கண்காணிப்புப்பிரிவு,
காஞ்சிபுரம்..

ஒப்பம் xxx
திருமதி.G.S.தமிழரசி,
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு & கண்காணிப்பு பிரிவு,
காஞ்சிபுரம்.

ஒப்பம் xxx
திருமதி.D.சிவகாமி,
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு & கண்காணிப்பு பிரிவு,
காஞ்சிபுரம்

ஒப்பம் xxx
திரு.க.வெங்கடேஷ்வரன், வயது-49
த/பெ. கணேசன்,
வட்டார போக்குவரத்து அலுவலர்,
வட்டார போக்குவரத்து அலுவலகம்,
திருப்பெரும்புதூர்,
காஞ்சிபுரம் மாவட்டம்

Kanchipuram V&AC, Cr.No.3/2018-FIR contents continues for Column-12:

The above complaint was received by the Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, Kancheepuram and endorsed to Tr.V.Ganesan, Inspector of Police, V&AC, Kancheepuram and the same is registered by me in Kanchipuram V&AC, Cr.No.03/AC/2018/KM u/s 13(2) r/w 13(1)(d) & 13(1)(a) of the PC Act 1988, 12 r/w 7 of the PC Act 1988 and 102 Cr.P.C. on 17.04.2018 at 16.00 hrs (Sd.xxx, Inspector of Police, V&AC, Kanchipuram).

The original FIR along with complaint enclosed with Joint Surprise Check Proceedings, Statements of Accused, Cash Rs.1,87,920/- and seized attested copy of the registers maintained at office of the Regional Transport Officer, Sriperumbudur at the time of surprise check, are submitted before the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chengalpattu and the other copies are forwarded to Superior Officers concerned.

17/4/2018

(V.GANESAN)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Kanchipuram.